நல்லூர் இளை நூலகம்
மாநகர சபை மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

ஏடு 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 29 வியாழக்கிழமை (13-08-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 259

# கொழும்பில் நேற்றும் குழப்பம்
# மக்கள் மீது கண்ணீர்ப் புகை!

## பத்மநாபா கொலை வழக்கு குற்றப் பத்திரிகை தாக்கல்

### நாகராஜன் உட்பட 24பேர் எதிரிகள்

சென்னை, ஆக. 13

1990ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா உட்பட 14 பேரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பாக விசேட நீதிவான் எஸ். எம். சித்திக் முன்னிலையில் நேற்றுக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் தி. மு. க. அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், முன்னாள் உள்துறைச் செயலாளர் நாகராஜன் மற்றும் 24 பேர் இக்கொலைகளுக்குக் காரணமாக இருந்தவர் அல்லது உடந்தையாக இருந்தனர் என்று இக்குற்றப் பத்திரிகையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சுப்புலட்சுமி ஜெகதீசனின் கணவர் ஜெகதீசனையும், நாடாளுமன்ற உறுப்பினர் வை. கோபாலசாமியின் தம்பி வை. ரவிச்சந்திரனையும் குற்றவாளிகளுக்கு புகலிடம் கொடுத்து இக்கொலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக கரையோரங்களில் மீண்டும் புலிகள் நடமாட்டம்

### ராஜ்ய சபையில் பிரஸ்தாபம்

தமிழக கரையோரப் பகுதிகளில் அண்மைக் காலமாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரித்து வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்த தமிழகத்துக்கு விசேட உதவி அளிக்கப்படவேண்டும்.

அ. தி. மு. கழக எம். பி. திரு. முத்துமணி நேற்று ராஜ்ய சபையில் பேசுகையில் மேற்கண்டவாறு மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

தமிழகத்திற்கு மிகப் பெரிய கரையோர எல்லை இருப்பதாகவும்—

அதனால் தமிழகத்தை எல்லையோர மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்றும்—

தமிழகத்தின் கரையோர எல்லைப் பகுதியை வலுப்படுத்த குறைந்தது 25 கோடி ரூபாயை விசேட உதவியாக மத்திய அரசு வழங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (இ-எ)

## பொலிஸுக்கு கூட்டத்தினர் கல்வீச்சு

கொழும்பு, ஆகஸ்ட் 13

கொழும்பில் - கனத்தையடியில் - மீண்டும் நேற்றும் பெரும் குழப்பம் ஏற்பட்டது.

மேஜர் ஜெனரல் விஜய விமல் ரத்தினாவின் இறுதிச் சடங்குகள் முடிந்த கையோடு அங்கு கூடி நின்ற மக்கள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அரசாங்கத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் மீதும், ஆதரவாளர்கள் மீதும் தொடர்ந்து கல் வீச்சு நடத்தப்பட்டது.

நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே பொலிசார் மக்கள் கூட்டத்தை நோக்கிக் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்தனர்.

ஆத்திரமுற்ற மக்கள் பொலிசார் மீதும் கல்வீச்சு நடத்தினார்கள்.

மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னா, ரியர் அட்மிரல் மொஹான் ஜயமஹா ஆகியோரின் இறுதிச் சடங்குகள் நேற்றுக் கொழும்பு கனத்தையில் நடைபெற்ற போது சுமார் ஒரு லட்சம் மக்கள் வரை அங்கு கூடி நின்றனர் என்று வெளிநாட்டு செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள், முப்படைகளின் உயர் அதிகாரிகள் ஆகியோரும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்.

ஊர்காவற்றுறைக் கண்ணி வெடித் தாக்குதலில் உயிரிழந்த லெப். ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இறுதிச் சடங்குகள் கனத்தையில் கடந்த திங்கட்கிழமை நடந்த போது அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டமும், குழப்பமும் நடைபெற்றது தெரிந்ததே.

நேற்றும், மேஜர் ஜெனரல் விஜய விமலரத்னாவின் இறுதிச் சடங்குகள் நடைபெற்ற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குமணவில் 7 நோயாளர் மட்டுமே

யாழ்ப்பாணம், ஆக. 13

எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறையில் இருந்து திருகோணமலை செல்லும் குமண கப்பலில் ஏழு நோயாளர்கள் மட்டுமே ஏற்றிச் செல்லப்படுகின்றனர்.

ஏனைய நோயாளர்கள் அடுத்த கப்பலிலேயே அனுப்பி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடம்

### கிறிஸ் மொறிஸ் கூறுகிறார்

லண்டன் ஆக. 13

உயர் இராணுவ அதிகாரிகள் ஒரே சமயத்தில் கொல்லப்பட்டுள்ள இவ்வேளையில், இராணுவம் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி இறுதித் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு ஜனாதிபதியிடமே உள்ளது.

பி. பி. ஸி. யின் முன்னாள் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ் மொறிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உயர் இராணுவ அதிகாரிகள் ஒரே சமயத்தில் கொல்லப்பட்டிருப்பதால் மக்கள் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்துள்ளார்கள். இராணுவம் வெற்றி பெற்று வருவதாக பத்திரிகைகள் எழுதிக் கொண்டிருக்கையில் இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது.

இம்முறை மக்களின் ஆத்திரம் அரசுக்கு எதிராகவே திரும்பியுள்ளது. 10 வருடங்களுக்கு முன் இதுவே தமிழ் மக்களுக்கு எதிராகத் திரும்பி இருந்தது.

டென்ஸில் கொப்பேகடுவ புலிகளுக்கு எதிரான வலு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் வாழும் பகுதிகளில் மட்டக்களப்பில் பதற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 13

மட்டக்களப்பு எல்லைப் புறக் கிராமமான புனாணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 50க்கும் அதிகமான தமிழர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் வாழும் இடங்களான வாகரை, பளுகாமம், கொக்கட்டிச்சோலை ஆகியவற்றில் பதற்றம் நிலவுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

புனாணையில் கடந்த ஞாயிறன்று சுமார் 500க்கும் அதிகமான தமிழர்கள் படையினரால் ஏமாற்றி கூட்டிச் செல்லப்பட்டதும்—

பின்னர் அவர்களின் மீது இராணுவத்தினர் நடத்திய வன்முறைகளில் 50க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதும் தெரிந்தவையே.

இராணுவத்தினரால் கூட்டிச் செல்லப்பட்டவர்களில் பலர் கத்தி வெட்டுக்காயங்களுக்கும், சூட்டுக் காயங்களுக்கும் இலக்காகினர். முகாம்களுக்குக் கொண்டு செல்லப்பட்ட பலர் மோசமாகத் தாக்கப்பட்டனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீலங்காப் படையினரால் பிடிக்கப்பட்ட தமிழக மீனவர் 20பேரும் இராமேஸ்வரம் திரும்பினர்

சென்னை, ஆக. 13

ஸ்ரீலங்கா கடற்படையினரால் இம்மாதம் இரண்டாம் திகதி வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்ட தமிழக மீனவர்கள் இருபது பேரும் நேற்று முன்தினம் இராமேஸ்வரம் திரும்பினர் என்று அறிவிக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. என். என். ஜா, ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு நடத்தி இவர்களை விடுவிக்க ஏற்பாடுகள் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## சிங்களவர்களின் கோபம் இப்போது அரசின் பக்கம்

### ஜேர்மன் வானொலி விமர்சனம்

மிலான், ஆக. 13

இராணுவத்தினர் உயிரிழந்ததற்காக தமிழ் மக்கள் மீது பழிவாங்கும் தாக்குதல்களை மேற்கொள்ளும் தமது முன்னைய போக்கை சிங்கள மக்கள் இம்முறை தவிர்த்துள்ளனர். இப்போது அவர்களின் எதிர்ப்பு அரசு பக்கம் திரும்பியிருக்கிறது.

தமிழ் மக்களுடனான போரை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரத் தேவையான வலு அரசுக்கு இல்லா திருப்பது பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்கிறது.

—ஜேர்மன் வானொலிக்கு அதன் கொழும்புச் செய்தியாளர் லூஷியன் ராஜகருணநாயக்கா அனுப்பி வைத்த செய்திக் கண்ணோட்டத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகளின் போது அரச எதிர்ப்புக் கலவரங்கள் வெடித்தன.

சாதாரண மக்களுடன் நெருக்கமான தொடர்புகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

**காடு வளர்க்க கைகொடுத்தால் - இந்நாட்டு சூடு தணிக்கும் செயல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் என் பக்கம் இருக்கின்றனர் எவரும் என்னை அசைக்க முடியாது

## தம்புள்ள கூட்டத்தில் பிரேமா

கொழும்பு, ஆகு 13 பொதுமக்கள் என் பக்கம் இருக்கின்றனர். அவர்கள் என்னுடன் இருக்கும்வரை எவரும் என்னை அசைக்கவோ, அகற்றவோ முடியாது.

தம்புள்ளவில் கடந்த திங்கட்கிழமை நடந்த கூட்டம் ஒன்றில் பேசும்போது ஜனாதிபதி பிரேமதாஸா இவ்வாறு கூறினார்.

எந்த தீயசக்தியாலும் என்னை பதவியிலிருந்து அகற்ற முடியாது. எனது அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைகளைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்களும், எம்மைப் பதவியிலிருந்து அகற்ற முடியாது என்பதை உணர்ந்துள்ளவர்களுமே எமக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றனர்.

இன்றைய உண்மை நிலையை மக்கள் நன்கு உணர்ந்துள்ளனர் — என்றும் அவர் சொன்னார். [ஒ-த]

## பெனாஸிர் பூட்டோவை தூக்கிலிடக் கோரிக்கை

இஸ்லாமுக்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டு வரும் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவை தூக்கிலிட வேண்டும்.

பாகிஸ்தான் மத்திய சமயத்துறை அமைச்சர் அப்துல் சத்தார் நியாஸி இவ்வாறு கூறியுள்ளார்.

தூக்குத் தண்டனையில் இருந்து திருமதி பெனாஸிர் பூட்டோ தப்ப வேண்டுமானால் அவர் அல்லாஹ்விடமும் நாட்டு மக்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்றும் அப்படிச் செய்தால் இக்குற்றம் மன்னிக்கப்படலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானில் நாடாளுமன்றத்தை விட இஸ்லாமிய மதவாதிகளால் அல்லது முல்லாக்களால் நிர்வகிக்கப்படும் நீதிமன்றத்துக்கு அதிக அதிகாரம் அளிக்கும் விதத்தில் அரசியல் சட்டத்தைத் திருத்த பிரதமர் நவாஸ் ஷெரீப் முடிவு செய்திருக்கிறார்.

இம்முடிவுக்கு எதிராக பெனாஸிரும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களும் கடுமையான கருத்துக்களைக் கூறிவருகின்றனர்.

இக்கருத்துக்களே இஸ்லாமுக்கு எதிரானவை என்று மத்திய சமயத்துறை அமைச்சர் நியாஸி தெரிவித்து, பெனாஸிர் பூட்டோவைத் தூக்கிலிட வேண்டும் என்று கோரி உள்ளார். [இ-எ]

## ஆப்கன் தலைநகர் காபூலில் கடும் சண்டை தொடர்கிறது

ஆப்கானிஸ்தானில் ஹெக்மத்தியாரின் தீவிரவாத கெரில்லாப் பிரிவிற்கும், அரசாங்கத் துருப்புகளுக்கும் இடையே காபூலில் கடும் சண்டை தொடர்கிறது. தீவிரவாதிகள் குழு கடுமையாக ரொக்கெட் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

தலைநகரின் கிழக்கே உள்ள இராணுவ பல்கலைக் கழகத்தைச் சுற்றி ஹெக்மத்தியாரின் படைகள் அரச படைகளுடன் நேற்று முன்தினம் மோதின.

ஆப்கானிஸ்தானின் உள்நாட்டுப்போரில் இதுவரை நடந்துள்ள சண்டைகளில் மிக மோசமான இச் சண்டையில் தாம் வெற்றி பெற்றிருப்பதாக அரச துருப்புகள் தெரிவிக்கின்றன. 30 ஆயிரம் அரச துருப்புகள் இச்சண்டையில் ஈடுபடுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சமரில் ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம், அல்லது காயமடைந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் தீவிரவாதிகளின் மிகக் கடுமையான ரொக்கெட் தாக்குதல்களினால் தலைநகர் காபூலில் மிக மோசமான சேதங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. [த]


வெளிவந்துவிட்டது!

தமிழ்மொழி செயல் நூல் ஆண்டு 5

புலமைப் பரிசிற் பரீட்சைக்குரிய மாதிரி வினாத்தாள்களுடன்

பதிப்பாளர்,
ஸ்ரீ காந்தா புத்தகசாலை
330, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[22150]


## எழுதுநர்-தட்டெழுத்தாளர் பரீட்சை: 5 ஆயிரம் விண்ணப்பங்கள் கப்பலில் அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஆக. 13 யாழ். செயலகத்துக்கு கிடைத்த எழுதுநர், தட்டெழுத்தாளர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பங்களில் சுமார் 5 ஆயிரம் விண்ணப்பங்கள் முதல் தொகுதியாக நேற்று குமண கப்பலில் அனுப்பப்பட்டன.

அத்துடன் தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் முதல் ஏழு நாட்களுக்கான விடைத்தாள்களும் நேற்று கப்பலில் அனுப்பப்பட்டுள்ளன. [இ]

## சுவிஸ் தூதுவரிடம் கோரிக்கை

கொழும்பு, ஆக. 13 சுவிஸில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவது குறித்து மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

புளொட் இயக்கத்தைச் சேர்ந்த திரு. த. சித்தார்த்தன் சுவிஸ் தூதுவரைச் சந்தித்து இக் கோரிக்கையை விடுத்தார். [ஒ-எ]

## துட்டகைமுனுக்கு கொப்பேகடுவ ஒப்பானவராம்

கொழும்பு, ஆக. 13 செவ்வாய் கொழும்பில் வெளியான சிங்களப் பத்திரிகையான ''திவயின''வின் ஆசிரிய தலையங்கத்தில் காலஞ்சென்ற லெப்டினன்ட் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ துட்டகைமுனுக்கு ஒப்பானவர் என்று வர்ணிக்கப்பட்டுள்ளதாம்! [உ-10]

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஆக. 13 இணுவில் - கோண்டாவில் காரைக்கால் சிவன் கோவில் மகோற்சவத்தில் தொடர் சொற்பொழிவு நிகழ்த்திய ஆசிரியர் திரு. ஆறுமுகம் திருமுருகனுக்கு இன்று இரவு பட்டமளிப்பும் பாராட்டு விழாவும் நடைபெறுகின்றன.

மேற்படி ஆலயத்தில் நடக்கும் பிரஸ்தாப விழாவில் பலர் பாராட்டுரை வழங்குவதோடு, தொடர் விரிவுரையின் நிறைவுரையும் இடம் பெறும். [அ]

## கலைஞானி கண்காட்சி மண்டப திறப்புவிழா

யாழ்ப்பாணம், ஆக. 13 'கலை ஞானி' கண்காட்சி மண்டபத்திறப்பு விழா இன்று வியாழன் காலை 8-00 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில இடம்பெறும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வீ. பொ. பாலசிங்கம் இதனைத் திறந்து வைப்பார்.

யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி தெய்வேந்திரம் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். (இ)

# எமது போராட்டத்தின் வெற்றிக்கு தமிழ்த் தேசிய பலமே காரணம்!

## கருத்தரங்கில் இளம்பரிதி

எமது மக்களின் தமிழ் தேசிய பலம் இன்று பெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது. தமிழ் மக்களின் போராட்டம் நியாயமானது தான் என சிங்கள மக்களை உணரச் செய்ததும் தமிழ் தேசிய பலம் தான். எனவே தமிழ் தேசிய பலம் எந்த நிலையிலும் சிதைந்து போகாமல் பொருளாதார நிர்மாண, திட்டமிடல் பணிகளில் அனைவரும் ஒன்றுபட்டு புலிகளின் கரங்களை பலப்படுத்த பாடுபட வேண்டும்.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற, தென்மராட்சிப் பகுதி உள்ளுராட்சி மன்ற ஊழியர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசும் போது விடுதலைப் புலிகள் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஸ்ரீலங்கா அரச பல தடைகளை எம்மீது சுமத்திய போதும் தமிழ்த் தேசிய பலத்தை அவர்களால் உடைக்க முடியவில்லை. இப் பலம் தான் சிங்களப் படையினரின் நடவடிக்கைகள் தோல்வியில் முடியக் காரணமானது-என்றார்.

இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் மக்கள் சமுதாயம் தமது பொருளாதார சுமைகளைக் குறைக்க அரச ஊழியர்களின் உதவியை நாடுகின்றனர். மக்களே எமது எஜமானர்கள் என்ற நோக்கில் ஒவ்வொரு அரச ஊழியரும் செயல்பட்டு அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

ஆயுதம் ஏந்தித் தான் போராட வேண்டும் என்பதில்லை; தேவைக்கேற்ப உரிய நேரத்தில் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கினால் கூட அது விடுதலைப் போராட்டத்திற்குக் கிடைக்கும் மகத்தான வெற்றியாகும்- என்றும் அவர் சொன்னார். (த-117)


45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்

மலராய்:
19 – 04 – 1969

வீதையாய்:
30 – 06 – 1992



மேஜர் லம்பா (விடுதலை)
(இராஜரட்ணம்' ஆனந்தராஜா)

விடுதலைப் போரிடவே
''விடுதலை'' யாய் பெயர் கொண்டாய்
சுடு கலையை பயின்றாய் இனம்
சுதந்திரம் இன்றித் துயர்
படுதலை தவிர்த்திடவே
படையிடையே போய் வீழ்ந்தாய்!

13-08-1992 இன்று வியாழக்கிழமை அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் வண்ணம் உற்றார், உறவினர், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு அப்பா, அம்மா,
அண்ணா, தங்கை.

இல 5, ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[22147]



பாரதி
சித்தன்கேணி

★ கணக்கியல்
திரு. யோகராஜா
B. Com. (Hons.)

A/L 93
பங்குடமை
செவ்., வியா. - 3 p.m.
தொங்கற்கணக்கு
5 p. m.

A/L 94
முடிவுக்கணக்குகள்
செவ்., வியா. - 4 p. m.

ஆரம்பம் :
13-08-1992

[8/2406]


## சுதந்திரக் கட்சிக்கு அனுரா தலைவராவதை சந்திரிகா ஆதரிப்பாராம்

கொழும்பு, ஆக. 13 சுதந்திரக் கட்சியின் தலைவராக திரு. அனுரா பண்டாரநாயக்கா வருவதை நான் ஆதரிப்பேன்.

திருமதி சந்திரிகா குமாரணதுங்க, கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்தார்.

''கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி 1990 ஜனவரியில் இருந்து ஐந்து தடவைகள் அனுராவை நான் கேட்டுள்ளேன்.

''எனது தாயாரின் பின்னர் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அனுராதான் வரமுடியும் இதனையும் நான் அவரிடம் கூறியுள்ளேன்.

''கட்சியில் என்ன என்ன வேண்டுமோ அவற்றை எல்லாம் எடுத்துக் கொள்ளும்படியும் அனுராவிடம் கூறிவிட்டேன்.

### பிரித்து வைக்க அரசு முயற்சி

''தலைமைப் பதவி விஷயத்தில் அவரை நான் எதிர்ப்பேன் என்று அனுரா அஞ்சுகின்றார். எனது நிலை மாறவில்லை அப்படி நான் மாற்றுவதானால் முதலில் அதனை நான் அனுராவிடம் கூறுவேன்.

''எம் இருவரையும் பிரித்து வைக்க இந்த அரசாங்கம் தன்னாலான முயற்சிகளை எடுக்கும் என்றும் நான் அனுராவிடம் கூறியுள்ளேன், அரசாங்கத்திடமிருந்து பணம் பெற்றுவருபர்கள்தான் அனுராவைச் சுற்றி உள்ளார்கள் என்று நான் சந்தேகப்படுகின்றேன்.

''அப்படியானவர்கள் என்னைச் சுற்றி இல்லை காரணம் அப்படியானவர்களை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. கட்சியில் பதவிகள் பெறும் போராட்டத்தில் நான் பங்கு பற்றவில்லை.

''எதிரியுடன் சண்டை பிடிப்பதே எனது அரசியல் வழி; நேச சக்திகளுடன் சண்டை பிடிப்பதல்ல. கட்சியில் நான் எந்த அணியிலும் இடையாது.'' — என்று சந்திரிகா கூறினார். [அ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# பால் பதனிடும் தொழிற்சாலை கிளிநொச்சியில் நிர்மாணம்

## விரைவில் இயங்கும் எனத் தகவல்

கிளிநொச்சிப் பகுதியில் கூடுதலாக கிடைக்கும் பாலைக் கொண்டு உப பொருள்களை தயாரிக்க, பால் பதனிடும் தொழிற்சாலை ஒன்று அங்கு அமைக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சியிலுள்ள யாழ். பல்கலைக்கழக விவசாயபீடத்தின் ஏற்பாட்டில், ஆறு லட்சம் ரூபா செலவில் இந்தத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

உள்ளூர் மூலப்பொருள்களான சுண்ணாம்பு, மணல் ஆகியவற்றை பயன்படுத்தியே இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது என்றும், இத்தொழிற்சாலை விரைவில் செயற்பட ஆரம்பிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சிப் பகுதியில் கிடைக்கும் பாலை பதனிடவும், அவற்றில் இருந்து பட்டர், ஐஸ்கிரீம் போன்ற உப பொருள்கள் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த தொழிற்சாலைக்கான இயந்திராதிகள் இந்தியாவில் இருந்து தருவிக்க ஏற்பாடாகியுள்ளது.

[ஒ-3]

## 3ஆம் மாடியிலிருந்து விழுந்த சிறுவன்

கொழும்பு, ஆக. 13

கொழும்பு கோட்டை வை.எம்.சி.ஏ. கட்டடத்தில் மூன்றாம் மாடியிலிருந்து தவறி விழுந்த ஆப்கானிஸ்தான் சிறுவன் ஒருவன் ஆபத்தான நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான். [த]

## 5-ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை: தீவக மாணவர்களுக்கு பரீட்சை நிலையங்கள்

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவிருக்கும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தீவக மாணவர்களுக்கு பின்வரும் பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

★ புங்குடுதீவுக் கொத்தணி மாணவர்கள்: யாழ். இந்து மகளிர் கல்லூரி

★ வேலணைக் கொத்தணி: வைத்தீஸ்வரக்கல்லூரி

★ மண்டைதீவுக் கொத்தணி: புனித மரியாள் வித்தியாலயம்

★ ஊர்காவற்றுறைக் கொத்தணி: சென். ஜோன்ஸ் அக்கடமி.

மாணவர்களின் கட்டிலக்கங்களை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் தத்தமது கொத்தணி அதிபர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (ஒ)

## அகதிகள் தங்கியிருக்கும் குடிசைகளை திருத்த ஏற்பாடு

### செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 13

இடம்பெயர்ந்து வந்த மக்கள் தங்கியிருக்கும் குடிசைகளை புனரமைக்க யாழ். செயலகமும், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையமும் ஏற்பாடுகளைச் செய்துவருகின்றன.

மழை காலம் நெருங்குவதால் அகதிகள் தங்கியுள்ள குடிசைகளைத் திருத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ள 5 ஆயிரம் குடிசைகளில் ஆயிரத்து 300 குடிசைகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியுடன் செஞ்சிலுவைச் சங்க யாழ்' கிளை புனரமைக்கவிருக்கிறது.

மிகுதியான குடிசைகளை யாழ். அரச அதிபர், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் புனரமைக்க ஏற்பாடுகளைச் செய்யவுள்ளார்.

இவை சம்பந்தமான விடயங்கள் குறித்து அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் அரச அதிபர்களுடன் கடந்த திங்கட்கிழமை கலந்துரையாடினர். [ஒ-3]

## கோப்பாயில் மாவீரர்கள் நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 13

ஈழவிடுதலைப் போராட்டம் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை காவலும் வலிகாமம் கோட்டத்தில்— ஆகஸ்ட் மாதங்களில்— வீர மரணமடைந்த மாவீரர்களை நினைவு கூரும் அஞ்சலிக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

அதன்படி கோப்பாய் வட்டத்தில், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நாளை வெள்ளிக்கிழமை இரவு 7-30 மணிக்கு அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.

இதில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் பலர் உரையாற்றவுள்ளனர்.

[ஒ]


சிவாகி
சாவகச்சேரி.
O/L
மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்: 15-8-92
காலை 7 மணி
★ கணித, விஞ்ஞான, ஆங்கில வகுப்புக்கள் வாரத்தில் 4 மணி நேரம் நடைபெறும்.
★ ஒழுங்கமைந்த சேவை.
(சி-3130)


## கொப்பேகடுவ இறுதிக் கிரியை; கனத்தை அசம்பாவிதம் பற்றி வாக்கு மூலங்கள் பதிவு

கொழும்பு, ஆக. 13

கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகளின்போது கனத்தை மயானத்தில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களுடன் தொடர்புடைய பலரின் வாக்குமூலங்களைப் பதிவு செய்யும் பணி நேற்று முன்தினம் பொலீஸாரினால் ஆரம்பிக்கப்பட்டது.

இறுதிக் கிரியைகளின் போது எதிர்க்கட்சிகளின் ஆதரவுக் கும்பல்களே முறைகேடாக நடந்து கொண்டன என்று பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-த]

## விதவைப் பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஆக. 13

வடமாகாணத்தில் இராணுவ நடவடிக்கையால் விதவையான பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்புக்காக விசேட திட்டங்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

அரிசி இடித்து மாவாக்கி, வறுத்து சந்தைப்படுத்துதல், கோழி, ஆடு வளர்த்தல், சிறிய கடை ஆரம்பித்தல் — இவை போன்றவற்றுக்குத் தேவையான உதவிகளை இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

யாழ். மாவட்டத்தில் 100 விதவைகளுக்கும், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 100 விதவைகளுக்கும் சுயதொழில் முயற்சிக்கான நிதி உதவியை இந்த நிறுவனம் இதுவரை வழங்கியுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள 145 விதவைகளுக்கான சுய தொழில் ஊக்குவிப்பிற்கான நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது. [ஒ-3]


இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்
மகாலக்ஷ்மி பூஜை, சுமங்கலி பூஜை, தீப பூஜையை
முன்னிட்டு
விசேட நிகழ்ச்சி
★ பட்டி மன்றம் ★
காலம்; 13 — 08 — 1992 வியாழக்கிழமை
இரவு 9-00 மணி
நடுவர்:
செஞ்சொற் பாரதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
(அமைப்பாளர் அகில இலங்கைக் கம்பன் கழகம்)
பொருள்:
"தாங்கொணாச் சோதனையில் தளம்பாத பெருமைக்குப் பெரிதும் உரியவள்"
கோசலையே!
திரு. க. சிவராமலிங்கம்
திரு. ஆ. திருமுருகன்
திரு. க. குமாரதாசன்
தாரைகையே!
திரு. இரா. செல்வவடிவேல்
செல்வன் ஸ்ரீ பிரசாந்தன்
திரு. தி. திருநந்தகுமார்

மண்டோதரியே!
திரு. ஏ. சி. பொன்னுத்துரை
திரு. க. ரகுபரன்
திரு. த. சிவகுமாரன்
இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் கோவில்- தேவஸ்தானம்.
(22141)



உ
மிருதங்க அரங்கேற்றம்

சங்கீத ரத்தினம் திரு. எம். சிதம்பரநாதன்
அவர்களிடம்
மிருதங்க இசை பயின்ற
எங்கள் மகன்
செல்வன் சபாநாயகம் ஹரிதரன்
அவர்களின்
★ மிருதங்க அரங்கேற்றம் ★
காலம்: 13-08-1992
இன்று (வியாழக்கிழமை)
மாலை 6 30 மணி
இடம்: கரணவாய் மூத்த விநாயகர் ஆலய முன்றல்
தலைவர்: சங்கீத பூஷணம் திரு. ச. பாலசிங்கம் அவர்கள்
பிரதம விருந்தினர்கள்:
பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் (யாழ். பல்கலைக்கழகம்)
கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள் (யாழ். பல்கலைக்கழகம்)
இசையரங்கு
பாட்டு: சங்கீத பூஷணம் திரு. எஸ். பத்மலிங்கம்
வயலின்: இசை ஞான திலகம் திரு. ஆர். இராதா கிருஷ்ணன்
மிருதங்கம்: செல்வன் எஸ். ஹரிதரன்
கடம்: கலாவித்தகர் செல்வன் கே. கண்ணதாசன்
கெஞ்சிரா: வித்துவான் செல்வன் எஸ். நாகராஜன்
கலைஞர்கள், ரசிகப் பெருமக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- திரு. திருமதி சபாநாயகம்.
சந்தமலர், 631, நாவலர் வீதி, நல்லூர்.
(22189)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில் பெரிய வீடு நாலரைப் பரப்பில் விற்பனைக்குண்டு. வாங்குபவர் நேரில் வரவும். பாலசிங்கம், இல. 01, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. [சாமுவேல் தொழிற்சாலையிலிருந்து இரண்டாவது வீடு]
[22121]

நல்லின மரக்கறி மற்றும் பழமரநாற்றுகள் விற்பனைக்கு உண்டு. சிறுவர் நிறைவாழ்வு இல்ல நிதிக்கான தற்காலிக விற்பனை நிலையம். நல்லை ஆதீனம் அருகில். சைவவித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி. [22100]

யமுனாபாறி ஆடு, முதல் ஈத்து 4 மாத கறுத்த கடாக்குட்டியுடன் பால் கறக்கும் நிலையில் விற்பனைக்குண்டு. 6/2, சந்தனமாதா கோவில் வீதி, பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளி. [22134]

## வெற்றுப் பைக்கற்று

பாமோ வெற்றுப் பைக்கற்றுகள் தொகையாகவும், சில்லறையாகவும் தேவைப்படுகின்றன. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்: அன்னா தொழிலகம். இணுவில். [சி-3127]

## புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[5237]

யாழ். மாவட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் நடத்தப்படும் புலமைப்பரிசில் அடுத்த பரீட்சை 15-08-92 சனி மு.ப. 8 - 00, மு.ப 10 - 30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
[22145]

## O/L மாணவர்களுக்கு

O/L மாணவர்களுக்கு ஆறு வருட கடந்த கால வினாத்தாள் தமிழ்மொழி பெயர்ப்புடன் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
[சி-3126]

## பொறியியல்

சகல பொறியியல் ஆராய்வு, திட்டமிடல், கட்டுமான வேலைகளுக்குக் கடிதம் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். யோ. சசிதரன், Eelam, Engineering Establishment, 36/11 A, காட்டுக் கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி.
[22129]

## இலவச திருமண சேவை

35 வயது, ரேவதி, செவ்வாய் 8, கிரகபாவம் 33, ஆயுர்வேத வைத்தியருக்கு அதே தொழில் மணமகள் தேவை. சகல துறைகளில் மணமக்கள் உண்டு. ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [22135]

35 வயது, அனுசம், செவ்வாய் 4, அரச தொழில் புரியும் மணமகளுக்கும், 33 வயது, திருவோணம், செவ்வாய் 8, ஜேர்மனியில் உள்ள மணமகனுக்கும் மணமக்கள் தேவை. திருமணம் இலங்கையில் செய்யலாம். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[22136]

---

# மருதமடு மாதாவின் 3ஆம் ஆண்டு உற்சவம்

அச்சுநகர் மக்களை இக்கட்டான பயங்கரமான நிலையிலும், துயரத்திலும் காப்பாற்றி இன்றும் எங்களை தன்னோடு அதே இடத்தில் வைத்தமைக்காக நன்றிகூறி வாழ்த்தும் முகமாக 15 - 08 - 1992 அன்று மாலை 4-00 மணிக்கு செபமாலையுடன் அன்னதான நிகழ்ச்சி நடைபெறும் இந் நிகழ்ச்சிக்கு அன்னையின் பக்தர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றீர்கள்.

இடம்:
தொழிற்பேட்டை வீதி,
சங்கானை றோட்,
அச்சுவேலி.

தகவல்:
எஸ். நீக்லஸ்.

[5224]

---

யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்

# பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் தெரிவு

யா/ பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான.

பழைய மாணவர் கூட்டம்; 1992 - 08 - 15 சனிக்கிழமை மு. ப, 9-30 மணிக்கும்

பெற்றோருக்கான கூட்டம்: 1992 - 08 - 15 சனிக்கிழமை பி. ப. 3-30 மணிக்கும்

பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

தகைமையுடையவர்கள் தவறாது வருகை தந்து ஒத்துழைக்குமாறு அழைக்கிறேன்.

க. கனகசிங்கம்,
(அதிபர்)

[சி-3044]

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**

DAY CLASSES
(8-00—2-00)
EVENING CLASSES
(3-00—6-00)
Sat.&Sun.CLASSES
(8-00—2-00)

வகுப்புகளுக்கான

## PAPER CLASS

எமது வழமையான திறமைமிக்க யாழ். முன்னணி ஆசிரியர்குழு

ஆரம்பம்: 20 - 08 1992


★ பாட அலகு ரீதியாக வினாத்தாள் வழங்கப்பட்டு மீட்டல் செய்யப்படும்.

(சி/3131)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 28 — 09 — 1936



மறைவு: 06 — 08 — 1990

அமரர்
**சுப்பிரமணியம் தர்மபாலன்**
(இளைப்பாறிய விரிவுரையாளர், மொறட்டுவ பல்கலைக்கழகம்)

திதி: 13—08—1992

இதயத்தின் ஒளிவிளக்கே!
குடும்பத்தின் குலவிளக்கே!
ஈராண்டு சென்றாலும்,
உம் நினைவு என்றும் மாறாது!

உமது பிரிவால் துயருறும்;
மனைவி, மக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

இல: 4, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[22140]

---

தச்சுத் தொழிலாளர் சங்க

# பொதுக் கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கப் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும், எதிர்வரும் 16 - 08 - 92 அன்று காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளது என்பதை சகல தச்சுத் தொழிலாளர்களுக்கும் அறியத் தருகிறோம்; யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் பிரிவுதோறும் இணைப்பாளர் தெரிவும் இடம்பெறும்.

இங்ஙனம்:
இடைக்கால நிர்வாகக் குழு.

[22128]

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வெளிவாரிப் பரீட்சைப் பகுதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 14 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. எனவே கலை முதல் தேர்வு / வர்த்தக முதல் தேர்வுக்குரிய மாணவர்கள் தங்களது பரீட்சை அனுமதி அட்டைகளை 17 ஆம் திகதியிலிருந்து 25 ஆம் திகதி வரையும் வெளிவாரிப் பரீட்சைப் பகுதியில் தங்களது பரீட்சைக்குரிய அடையாள அட்டைகளைக் காண்பித்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளவும்.

- பதிவாளர்.

[சி 3045]

---

தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்
(மருதனார் மடம் கல்விக் கோட்டப் பிரிவு)

# பொதுச்சபைக் கூட்டம்

இடம்: வீனஸ் கல்வி நிலையம் (சுன்னாகம்)

காலம்: 14-08-1992 வெள்ளி மாலை 4 மணிக்கு

விடயம்
★ புதிய சட்ட விதிகள் சம்பந்தமான பிரச்சினைகள்
★ புதிய நிர்வாகசபை தெரிவுக்கான கலந்துரையாடல்
★ பிறவிடயங்கள்
★ த. ஈ வி. புலிகளின் கல்வி விடயப் பொறுப்பாளர்களும் கலந்து கொள்கின்றனர்.

இக் கூட்டத்திற்கு மருதனார்மடம் கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள தனியார் கல்வி நிலைய இயக்குநர்கள் ஆசிரியர்கள், பிரத்தியேக வகுப்பு நடாத்தும் ஆசிரியர்கள், சகலரும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம். முடிவுகள் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படமாட்டாது.

- இணைச்செயலாளர்கள்.

(22146)

---

# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

## 93, 94 கலை, வர்த்தகம்

**பொருளியல் - திரு. கலாகரன்**

93 பிரிவு I பணம் வங்கி, சென்மதி நிலுவை, தேசிய வருமானம்

பிரிவு II வினா-விடை

94 பிரிவு I கேள்விக் கோட்பாடு, தேசிய வருமானம்

**வர்த்தகம் - திரு. தேவா**

93 பிரிவு I பொதுக் கூட்டுத்தாபனம், தொழில் நிறுவனங்கள்

94 பிரிவு II தொழில் நிறுவனங்கள்
பிரிவு I தொழில் நிறுவனங்கள்

**கணக்கியல் - திரு. வன்னியசிங்கம்**

93 பிரிவு I மாற்றுண்டியல் க/கு, ஒப்படைக் க/கு
பிரிவு II ஒப்படைக் க/கு

94 பிரிவு I முடிவுக் க/குக்கு செம்மையாக்கலும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று.

[சி-3134]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அரசிடம் சாதுரியம் உண்டா?

அரசாங்கத்தின் வட பிராந்திய படைத்துறை ஆணைப் பீடத்தினரை விடுதலைப் புலிகள் கூண்டோடு அழித்து விட்டனர். வட தமிழீழத்தில் நீண்ட காலமாக நடத்தப்படும் இராணுவத் தாக்குதலின் சூத்திரதாரிகளான மூன்று அதி உயர்நிலை அதிகாரிகள் புலிகளின் நிலக்கண்ணிக்குப் பலியாகி விட்டனர்

அதனால் வடக்கில் அரசின் இராணுவச் செயற்பாடுகளில் பெரும் இடைவெளி, வெடிப்பு ஏற்பட்டிருக்கிறது.

இத்தகைய பின்னணியில் வடக்கின் மீதான பெரும் படையெடுப்பு உடனடியாக நடக்குமா? கால தாமதமாகுமா? அல்லது முற்றாகக் கைவிடப்பட்டு அரசியல் தீர்வு ஒன்றை அரசு நாடுமா? என்ற மூன்று கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

அரசின் வட பிராந்திய படைத்துறை ஆணைப்பீடம் முற்றாகவே அழிக்கப்பட்டு விட்டதால், கொப்பேகடுவ-விமலரத்னா - ஜயமஹா - போட்ட திட்டத்தை வேறு எவர் வந்தாலும் நூற்றுக்கு நூறு விதம் செயற்படுத்த முடியாது. மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா தலைமை வகித்து நடத்தினாலும் கூட, மூலத் திட்டத்தைச் செயற்படுத்த முடியுமா என்பது சந்தேகமே. வேண்டுமானால் அவர் தனது சொந்தக் கழித்தல் கூட்டல்களைச் செய்து முந்திய போர்த்திட்டத்துக்குப் புதிய வடிவம் கொடுப்பார். அதற்கு அவருக்குக் கால அவகாசம் தேவைப்படும்.

ஆனால் "ஈழம் போர் - 2" இன் இறுதிச் சமர் என்று அரச மற்றும் இராணுவ வட்டாரங்கள் வர்ணித்து வரும் யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதலைத் தாமதித்தால் துருப்புகளின் மனத்திடத்தைக் குலைப்பதாக இருக்கும் என்று மறுபக்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அதனால் இயன்ற வரை உடனடியாக யாழ்ப்பாணத் தாக்குதலை நடத்த வேண்டும் என்ற கருத்தும், முன் வைக்கப்பட்டிருக்கிறது. கொப்பேகடுவவைவிட ஜெரிசில்வா திறமைசாலியாக இருக்க முடியாதா என்ற வாதமும் வைக்கப்படலாம்.

ஜெரிசில்வா என்ன சிசில் வைத்தியரத்னாவே தலைமை வகித்து தாக்குதல் நடத்தினாலும் புலிகளை வெல்வது கடினம் என்பதை அரசு உணர வேண்டும். இராணுவத்தின் எந்தப் புதிய போர்த் தந்திரோபாயத்தையும், உத்தியையும் முறியடிக்கக்கூடிய மாற்று உபாயங்களையும், உத்திகளையும் வகுத்துக் கையாள வல்லவர்கள் என்று புலிகள் முத்திரை பதித்திருக்கிறார்கள்.

இதனை மறந்து தொடர்ந்தும் இராணுவத் தீர்வை நாடுவதிலேயே அரசு அக்கறை கொள்ளுமானால் —

அதன் பொருட்டு இறுதிச் சமரான யாழ்ப்பாணம் மீதான தாக்குதலை நடத்துமானால்—

அதன் மூலம் தமிழ் மக்களில் பல லட்சத்தினரைக் கொல்ல இயலுமே அன்றி போரில் வெற்றி காண முடியாது.

எனவே, தனது வட பிராந்திய படைத்துறை ஆணைப் பீடம் அழிந்து போனது, யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்பதற்கான காலம் காட்டிய சமிக்ஞை என்று கொள்வதே அரசுக்கு நல்லது. அப்படிக் கருதி இராணுவ நடவடிக்கைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

அரசின் தீர்க்கதரிசனமில்லாத, முரட்டுத்தனமான இராணுவத் தீர்வு என்ற முடிவை மாற்றுவதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகும். விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்ற "கெச்சிதம்" அரசிடம் மேலோங்கினால் அது அரசியல் சாதுரியமாகாது.

# குடாநாட்டில் சிசு மரணங்கள் அதிகரிக்க போஷாக்கின்மையே காரணம்

## ஆரோக்கியமற்ற எதிர்கால சந்ததி உருவாகும் ஆபத்து

**பிறக்கும் சிசுக்களின் இறப்பு விகிதம் யாழ். மாவட்டத்தில் முன் எப்போதும் இல்லாதவாறு அதிகரித்து வருகிறது. யாழ். போதனா வைத்திய சாலைப் பதிவின்படி கடந்த ஏழு மாதகாலத்தில் 283 சிசு மரணங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் 148 சிசுக்கள் பிறந்து இறந்தவை. மிகுதிக் குழந்தைகள் தாயின் வயிற்றிலேயே இறந்து பிறந்தவை.**

**சிசு மரணங்கள் குறித்து யாழ். போதனா வைத்திய சாலை குழந்தைப் பேற்று வைத்திய நிபுணர் பேராசிரியர் சிவசூரியர் தெரிவித்த கருத்துக்கள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.**

யாழ்: குடாநாட்டில் தற்போது நிலவும் உணவுத் தட்டுப்பாடு, கிடைக்கும் உணவில் போஷாக்கின்மை மற்றும் சுகாதார பாதுகாப்பு வசதிக் குறைபாடுகள் ஆகியவையே சிசு மரணங்கள் அதிகரிக்கக் காரணங்கள் ஆகும்.

சிசுக்களின் எடை குறைவதனாலேயே அவை பிறக்க முன்னரோ அல்லது பிறந்த பின்னரோ மரணம் அடைகின்றன.

தற்போதைய யுத்த கால சூழ்நிலையில் கர்ப்பிணித் தாய்மாருக்கு போஷாக்குள்ள உணவு கிடையாமை, வைத்திய வசதிகளில் உள்ள குறைபாடுகள், பசி, பட்டினி ஆகியவை காரணமாகவே பிறக்கும் குழந்தைகள் நிறை குறைந்து பிறக்கின்றன.

### போஷாக்கு உணவு

கருத்தரித்த காலத்தில் இருந்து குழந்தை பேற்றுக் காலம் வரை தாய் கட்டாயமாக போஷாக்கான உணவுகளை உண்ண வேண்டும்.

குழந்தைப்பேறு காலம் வரை தாயாரின் உடல்நிலை மிக நல்ல நிலையில் இருக்க வேண்டும். கருவுற்ற காலத்தில் தவறாது மருத்துவப் பரிசோதனைக்கு (கிளினிக்) மாதம் தவறாது செல்ல வேண்டும். தாயின் உடலில் காணப்படும் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற பல தரப்பட்ட நோய்களும் குழந்தையின் வளர்ச்சி குறையக் காரணங்களாக அமைகின்றன. இதனால் தான் ஒவ்வொரு கருவுற்ற தாய்மாரும் மருத்துவப் பரிசோதனைக்குச் செல்வது அவசியம்.

தற்போது பிறக்கும் குழந்தைகள் காலம் முந்தியும் பிறக்கின்றன. யுத்த கால அதிர்ச்சிச் சம்பவங்கள் இதற்குக் காரணமாக அமையலாம்.

காலம் முந்திப் பிறக்கும் குழந்தை முழுமை நிலை பெறாததால் இறக்க நேரிடுகிறது.

பிரசவமாக தாமதமாகும் குழந்தைகளை உரிய நேரத்தில் பிறக்கவைக்க அனேகமாக சத்திரசிகிச்சையே மேற்கொள்ளப்படுகிறது அதற்குத் தாய்மார் உரியநேரத்தில் வைத்தியசாலைகளில் சமுகமாகியிருக்க வேண்டும்.

### வசதி இல்லை

இத்தனை கஷ்டங்களுக்கு மத்தியிலும் பிறந்த குழந்தைகளைப் பராமரிக்க போதிய வசதி இல்லாதிருப்பது சிசு மரணங்களுக்கு மற்றும் ஒரு காரணம் ஆகும்.

நிறைகுறைந்த சிசுக்களை பராமரித்துப் பாதுகாக்கும் பிரிவு (சிசுபராமரிப்பு நிலையம்) குடாநாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையில் மாத்திரமே உள்ளது.

இந்த சிசுபராமரிப்பு நிலையமும் கடந்த நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளாக போதிய உபகரணங்கள் மற்றும் மின் வசதி, இயந்திர வசதிகள் அற்றே இயங்கி வருகிறது.

இதனால் நிறைகுறைந்த சிசுக்களுக்கு போதிய பராமரிப்பு வழங்கி அவற்றைப் பாதுகாப்பதில் பெரும் சிரமங்கள் இருந்து வருகின்றன.

மொத்தத்தில் தற்போதைய நிலை தொடர்ந்து நீடிக்குமானால் போஷாக்கின்மை காரணமாக உருவாகும் எதிர்காலச் சந்ததி ஆரோக்கிய மற்ற ஒரு நிலைக்குத் தள்ளப்படலாம். (இ-15)

# தமிழருக்கு கூடுதல் அதிகாரத்தை தெரிவுக்குழு வழங்க வேண்டும்

## ஒஸி அபயகுணசேகரா கூறுகிறார்

கொழும்பு, ஆக. 13

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முகமாக முன் வைக்கப்பட்ட முதல் யோசனை இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை ஆகும். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு ஏற்படுத்தப்பட்ட மங்கள முனசிங்கா தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தத்தில் தமிழருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை விட கூடுதலான அதிகாரங்களை வழங்க வேண்டும்.

கொலை செய்யப்பட்ட அரசியல்வாதியும், நடிகருமான விஜய குமாரணதுங்காவினால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஒஸி அபயகுணசேகரா கொழும்பு வார தமிழ் இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி தற்போது இரண்டாகப்பிளவுண்டு, அதன் ஒரு பிரிவு திரு. ஒஸி அபயகுணசேகரா தலைமையில் இயங்குவதுடன் அரசாங்கத்துக்கு ஆதரவு அளித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

திரு.ஒஸி அபய குணசேகரா தமது பேட்டியின்போது மேலும் தெரிவித்ததாவது;

இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கை மூலம் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையாகக் கையளிக்கப்படவில்லை என்பது உண்மையே.

அரசாங்கம் இந்த விடயத்தில் முறையற்ற நிலையில் நடந்து கொள்கிறது. சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களை அரசு ஆணைக்குழு மூலம் மீளப் பெறுகிறது.

### தமிழரை ஏமாற்றமுடியாது

தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வு அவசியம், அது தமிழ் மக்களை ஏமாற்றக் கூடிய அரசியல் தீர்வாக இருக்கக் கூடாது.

அரசியல் தீர்வு என்ற போர்வையில் சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் அரசியல் வாதிகளை ஏமாற்றியதால் இன்று அரசியல் தீர்வை தமிழ் மக்கள் சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை தொடர்ந்து முழு அதிகாரங்களுடன் செயற்பட்டிருந்தால் இன்று ஏற்பட்டுள்ளது போன்று பிரச்சினை சிக்கல் அடைந்திருக்காது.

இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கைக்குப் பின் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ் இயக்கங்களுக்குக் கூட அதற்குரிய ஊக்குவிப்புகள் இடைக்கவில்லை.

### தமிழ் அமைச்சர்கள் போதாது

தமிழ் மக்களின் சனத்தொகைக்கு ஏற்ப தமிழ் அமைச்சர்கள் தற்போதைய அமைச்சரவையில் இடம் பெறவில்லை.

தற்போது உள்ள முஸ்லிம் அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கையைவிட இரண்டு மடங்கு தமிழ் அமைச்சர்கள் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

அமைச்சர் தொண்டமான் மாத்திரமே தற்போது அமைச்சரவைத் தரத்தில் அமைச்சர் பதவி வகிக்கிறார். அவர் மலையக மக்களையே பிரதிநிதித்துவப்படுத்துகிறார்.

ஆனால் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சரவையில் ஒருவர் கூட இல்லை. வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் சார்பில் குறைந்தது இரண்டு அமைச்சர்களையும் மூன்று ராஜாங்க அமைச்சர்களையுமாவது நியமிக்கவேண்டும் என்றார்- (இ)

# பொருள்கள் விலை நிர்ணயம்

'குமண' கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள பொருள்களை ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் விற்பனை செய்வதற்காக, அவற்றுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கப்பலில் வந்த பொருள்கள் ப. நோ. கூ. சங்கங்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளன.

விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ள பொருள்களில் விவரம் வருமாறு:-

ரவை ஒரு கிலோ — 34 ரூபா, மைசூர் பருப்பு ஒரு கிலோ — 58 ரூபா, ரின் மீன் (பெரியது) — 40 ரூபா, ரின் மீன் (சிறியது) — 25 ரூபா, சுயேந்திரா சோப் — 7 ரூபா, [illegible] 50 சதம். (உ-8)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 13

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தை முன்னிட்டு ஆலயச் சுற்றாடலில் பதினொராம் திருவிழா வான இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:-

★ கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப் பந்தலில் (மாலையில்)— கே. இராமநாதனின் இன்னிசைக் கச்சேரி.

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்)— கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் 'செந்தில் வேலவன்' என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2 மணிக்கு பௌராணிகர் மு. தியாகராசாவின் 'முருக இலக்கியங்கள்' தொடர் விரிவுரை. (ஒ-126)

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஆக. 13

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய சண்டி ஹாஹோம உற்சவம் இன்று வியாழக்கிழமை காலை 6 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறும். விசேட மேளக்கச்சேரிகள், திரு. இ. ஜெயராஜின் சொற்பொழிவு ஆகியவையும் இடம்பெறும்.

★ ★ ★

நீர்வேலி வாய்க்காற்தரவைப் பிள்ளையார் கோவிலின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றது. தீர்த்தோற்சவத் திருவிழா இன்று நடைபெறும். (த)

## ஆரம்பக்கல்வி பயிலுநர் ஆசிரியர் விண்ணப்பப் படிவம்

யாழ்ப்பாணம், ஆக. 13

நல்லூர் கி. சி. த. க பாடசாலையில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் ஆரம்பக்கல்வி பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்க தகுதி உடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சைக்குத் தோற்றிய இடம் பெயர்ந்த பரீட்சார்த்திகளின் விண்ணப்பப் படிவங்களை பரீட்சை ஆணையாளர் கோரியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டது.

மேற்படி பரீட்சார்த்திகள் இதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ் கல்வி திணைக்களத்தில் பெற்று, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன் கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த)

உ



## துணைவா வருக வருகவே!

ஒடுக்கும் பகையை உடைத்தெறிய
ஓர்மத் தோடு எழுந்தவர்கள்
ஓயா திங்கு மாவீரம்
உய்ய நின்றார் வீதியெலாம்

தொடுக்கும் சரங்கள் தொலைத் தருளும்
துணிவே! நல்லூர்ச் சோதியனே!
துவர்வாய் குறத்தி வள்ளியவள்
துணைவா! வருக! வருகவே!

— முருகனடியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறப்பதற்கு 4 நாட்களுக்கு முன்
# கொப்பேகடுவ பிரேமாவை சந்தித்துப் பேசினாராம்

கொழும்பு, ஆக. 13

வடபகுதி இராணுவத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவ இறப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்னர் — கடந்த 4 ஆம் திகதி அதிகாரிகளுடன் தம்மைச் சந்தித்ததாக ஜனாதிபதி பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்புப் பத்திரிகைகளில் இவ்வாறு செய்தி வெளியாகி உள்ளது.

கொப்பேகடுவவின் கொழும்பு விஜயம் யுத்தம் சம்பந்தமானதல்ல என்றும், தேவையற்ற பிரச்சினை காரணமாகப் பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ், முஸ்லிம் பொது மக்களின் நிலைபற்றி விளக்குவதாகவே அது இருந்தது என்றும்—

யுத்தம் நடைபெறும் இடங்களில் மக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை விளக்கும் வீடியோ படம் ஒன்றையும் அவர் தன்னுடன் கொண்டு வந்திருந்ததாகவும் ஜனாதிபதி தெரிவித்தார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. [ஓ-த]

## டிப்புளோமா வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஆக. 13

யாழ்ப்பாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் கல்வி டிப்புளோமா பட்டப்பின் படிப்புக் கல்வி நெறியில் பயிலும் — கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த — பயிற்சி ஆசிரியர்களுக்கான அமர்வுகள் இன்று வியாழக்கிழமை முதல் நான்கு நாட்கள் நடைபெறும்.

[த-3-162]

# சான்றிதழ் பெறாமல் 1 கோடி 50 லட்சம் பேர்

கொழும்பு, ஆக. 13

ஜி. சி. ஈ. சாதாரண தர, உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்குரிய சான்றிதழ்கள் சுமார் 1 கோடி 50 லட்சம் பேருக்கு இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

1968ஆம் ஆண்டுக்குப் பின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என பரீட்சை ஆணையாளர் திரு. ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

வருடாவருடம் லட்சக்கணக்கான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். சான்றிதழ்களைத் தயாரிக்கத் தேவையான ஆளணி, பாதுகாப்பான கடதாசி, மற்றும் வசதிகள் இல்லாத காரணத்தாலேயே சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

சான்றிதழ் கிடைக்காதவர்கள் தமது பெயர், முகவரி, சித்தி அடைந்த பரீட்சை, வருடம், சித்தி அடைந்த பாடங்கள் என்பவற்றைக் குறிப்பிட்டு பரீட்சைத் திணைக்களத்துக்கு அறிவித்தால் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் திரு. வெதமுல்ல தெரிவித்தார். [இ-10]

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி செல்லத்துரை

சின்னத்தம்பி செல்லத்துரை 11-08-92 இல் சென்னையில் காலமானார். இவர் செல்லம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், சுதாகரன் (ஜேர்மனி) திருமதி சுதாமதி (இந்தியா), தயாகரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமாரனின் (இந்தியா) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் சென்னையில் நடைபெற்றன. மல்லாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. செல்வராசா.
(மருமகன்)

ஐயனார் கோவிலடி,
மல்லாகம்.
[4941]

## சங்கரப்பிள்ளை செல்வரட்ணம்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் சிவகாமி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாக கொண்டவருமான சங்கரப்பிள்ளை செல்வரட்ணம் 12-8-1992 இல் காலமானார். இவர் காலம்சென்ற லட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திலகராணி, கனகராணி, ஜெயராணி, இந்திராணி, சதீஸன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், தனபாலசிங்கம் (வர்த்தக நிலையம் உரும்பராய்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரது ஈமைக்கிரியைகள் இல்லத்தில் 13-8-92 நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று இறுதிக் கிரியைகளிற்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S. தனபாலசிங்கம்
(மருமகன்)

இணுவில் கிழக்கு,
இணுவில்.
[22148]

## அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து

கரம்பொன் பாலாவி வீதியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து காலமானார். அன்னார் கிறிசிற்றம்மா (மேரிப்பிள்ளை)யின் அன்புக் கணவரும், திருமதி பிலோமினா ஸ்ரனிஸ்லாஸ் (இளைப்பாறிய ஆசிரியை, கரம்பொன் சிறியபுஷ்ப மகளிர் ம. வி.), மரியதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. வ. ஸ்ரனிஸ்லாஸ் (இளைப்பாறிய அதிபர் யாழ். மெலிஞ்சிமுனை றோ. க. வித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 13-08-92 காலை 8.30 மணிக்கு 29, சுவாட்ஸ்லேனில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
B. A. அருமைநாயகம்.

28, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.
[22149]

## திருமதி செல்லப்பா அன்னம்மா

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த திருமதி செல்லப்பா அன்னம்மா அவர்கள் 12-8-92 இல் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி செல்லப்பா (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி பவானி ஜெயராஜ் (ஆசிரியை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), செல்வி சறோஜா (முன்னாள் ஆசிரியை, சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்), திரு. கமலநாதன் (சர்வோதயம்), செல்வி சாந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு சுப்பிரமணியம் ஜெயராஜ் அவர்களின் அன்பு மாமியாரும், ஜெயராம் அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. ஜெயராஜ்

கல்வயல்,
சாவகச்சேரி.
[22152]

## இறுதித்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வான போராட்ட சத்தியாக இருந்தார். இராணுவம் வெற்றியடைய வேண்டுமென்பதில் அவர் உறுதியாக இருந்தார்.

—இவ்வாறு கிறிஸ் மொறிஸ் தெரிவித்தார். [இ-10]

## குமணவில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வக்கப்படுவர் என்றும்—

குறிப்பிட்டபடி 14 ஆம் திகதி கப்பல் சேவை இடம்பெறாது என்றும்— யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை குமணவில் செல்வதற்குத் தெரிவான நோயாளர்கள் ஞாயிறு காலை 7.00 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சமுகம் அளிக்குமாறும் கோரப்பட்டுள்ளது. [இ-15]

## கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்தகையோடு குழப்பம் தொடங்கியது.

இறுதிக் கிரியைகளுக்கு வந்து கூடியிருந்த மக்கள் கலவரங்களில் ஈடுபட்டனர். அரசு துக்கதினம் பிரகடனப் படுத்தாததைக் கண்டித்துக் கோஷமெழுப்பினர்.

கலவரத்தை அடக்கப் பொலிஸார் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் ஆத்திரமுற்ற மக்கள் பொலிஸாரை நோக்கி கல்வீச்சில் இறங்கினர். முக்கிய அரசுப் பிரமுகர்கள் மீதும் கற்கள் வீசப்பட்டன.

இச் சந்தர்ப்பத்தில் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். அதன் விளைவாக பலர் காயமடைந்தனர். ஏராளமான வாகனங்கள் சேதமடைந்தன. சில வாகனங்களும் எரிக்கப்பட்டன.

கொழும்பு நகரில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர். கனத்தைப் பகுதியில் பெருமளவு கலகமடக்கும் பொலிஸார் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-10)

## தமிழர் வாழும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற துச்சம்பவங்களைத் தொடர்ந்தே மட்டக்களப்புப் பகுதியில் பதற்றம் நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் வாகரைப் பகுதிக்கான உணவு விநியோகம் இராணுவத்தினரால் தடை செய்யப்பட்டு அந்தப் பகுதி தொடர்ந்து சுற்றிவளைக்கப் பட்டிருந்ததால் மக்கள் பெரும் இன்னல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது.

அதுபோன்ற ஒரு நிலை மீண்டும் இராணுவத்தினரால் ஏற்படுத்தப்படலாம் என மட்டக்களப்புப் பகுதி தமிழ் மக்கள் அஞ்சுவதாகவும் தெரிய வருகிறது.

கடந்த ஏப்ரல் 15ஆம் திகதியிலிருந்து இம்மாதம் 9ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கிழக்கில் 234 தமிழர்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர் [illegible] கொல்லப்பட்டனர் என்பது [illegible] டிக்காட்டப்படுகிறது.

## சிங்களவரின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திருப்பதாகப் பீற்றித் திரியும் பிரேமதாஸ அரசு மக்களின் மனநிலையை அறிந்து கொள்ளத் தவறி உள்ளதுபோல் தெரிகிறது.

கொப்பேகடுவவின் மரணச் சடங்குக்கு அரசு உரிய பங்களிப்புச் செய்யத் தவறியமைக்கு கொப்பேகடுவாவின் மனைவியைச் சாட்டி சமாளிக்க அரச தரப்பு முயற்சி செய்கிறது.

அவர்களுக்காக ஒரு நாளை தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்கவும், அன்றைய தினம் தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடவும் அரசு அறிவிக்கத் தவறியமை சிங்கள மக்களை ஆத்திரம் கொள்ள வைத்திருக்கிறது.

ஆனால் இதைவிட முக்கிய மற்ற சம்பவங்களுக்காக அரசு இத்தகைய நடவடிக்கைகளுக்கு முன்னர் உத்தரவிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு தளபதியாக யார் நியமிக்கப்பட்டாலும் விரைவில் ஒரு கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர் பார்க்கலாம்.

கடந்த சனிக்கிழமை கண்ணிவெடித் தாக்குதலில் இழந்த கௌரவத்தையும் நம்பகத்தன்மையையும் குறிப்பிட்டளவு மீட்டெடுக்க பிரேமா அரசு முயற்சி எடுக்க வேண்டியிருக்கும்.

உயிரிழந்த படைத்தளபதிகள் தயாரித்த திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படலாம். அதனால் குறிப்பிட்டளவு தீர்க்கமான விளைவுகளும் ஏற்படக்கூடும்.

ஆனால் புதிதாக நியமிக்கப்படும் படைத் தளபதிகள், இறந்த தளபதிகளின் புகழைச் சம்பாதிக்க வேண்டியிருப்பதுடன், விரக்தி நிலையில் உள்ளகீழ்நிலைத்துருப்புகளை வைத்துக் கொண்டு சமாளிக்க வேண்டியும் உள்ளனர்.

மேலும் சண்டை நீடித்துக் கொண்டு போவதும் —

இராணுவத்துக்கு தேவையான ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கான அதிகாரம் அரசியல் தீர்வு காண்பதில் அக்கறையில்லாத அரசியல் தலைவர்கள் வசம் இருப்பதும் —

புதிய படைத்தளபதிகள் எதிர்நோக்கும் பிரச்சனைகளாக இருக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக தமது நடவடிக்கைகளுக்கு திடமான ஒரு நோக்கம் இல்லாது இருப்பதும் அவர்களைக் குழப்பியுள்ளது.

இராணுவத் தீர்வு காண விழையும் பிரேமா அரசு யுத்தத்தை எதிர்கொள்ளத் தேவையான நிதியை மக்கள் மீது வரிப்பளுவைச் சுமத்தாமல் பெற்றுக்கொள்ள எதிர் வரும் வாரங்களில் சிரமப் படப்போகிறது.

வடக்கில் ஆத்திரத்துடன் குழம்பிப் போய் இருக்கும் இளம் இராணுவத்தினரும் — தெற்கில் அதிக சுமைகளைச் சுமக்கும் பொது மக்களும் —

அரசின் ஒவ்வொரு நடவடிக்கையையும் சந்தேகத்துடன் நோக்கும் போது எதிர் வரும் மாதங்களில் சமாதானத்துக்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன — என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

[உ-10]

## பத்மநாபா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு உறுதுணையாக இருந்தனர் என்று குற்றப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பன்னிரண்டு பக்க இறுதி அறிக்கையில் — ராஜீவ் காந்தி கொலைக்குக் காரணமான சிவராசனே இந்தப் படுகொலையையும் செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

[இ-எ]


# கிளிநொச்சி மாவட்ட கல்வி மேம்பாட்டு நம்பிக்கை நிதியம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உயர்தர வகுப்புக்களில் கற்பிப்பதற்கு தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பௌதிகவியல், உயிரியல் பட்டதாரிகளிடமிருந்து, அல்லது இப்பாட நெறிகளுக்கான இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளை எதிர்பார்ப்பவர்களிடமிருந்து உடனடியாக விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

02. விண்ணப்பங்கள் 24-08-1992 திங்கட்கிழமை பி. ப. 4.00 மணிக்கு முன்னதாக ''அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபுற மேற்புறத்தில் ''நிதிய ஆசிரியர்களுக்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

03. நேர்முகப் பரீட்சை பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும். வேதனம் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.
07-08-1992.

திரு. க. பொன்னம்பலம்,
நிதியத்தின் தலைவரும்,
அரசாங்க அதிபரும்.

[22144]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 302/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 13-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org